# தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின விழா!

கோவை,செப்.8

உலகளவில் டூஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம் நேற்று அனுசரிக்க ப்படுவதை முன்னிட்டு மரபணு பரிசோதனை, கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (எம்.டி.சி.,ஆர்.சி.) 100 –க்கும் மேற்பட்ட டூஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்க ப்பட்ட குழந்தை களுக்கு ஒரு சிறப்பு விழா நேற்று மாலை பீள மேட்டில் உள்ள ஒரு தனியார் ஹோட்டல் புல்வெளி அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு ஓ.ஆர்.டி.ஐ. நிறுவனர் பிரசன்னகுமார் பி.ஷிரோல் தலைமை தாங்கினார். இயற்கை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆர்.சுப்ரமணியம் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

டூகெதர்அனிஷேன்ஸ்ன் நிறுவனர் டெஸ்மாண்ட் இம்மானு வேல் எபெனெஸிர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். முன்னதாக எம்.டி.சி.,ஆர்.சி. தன்னார்வ நிறுவனர் டாக்டர் பி.ஆர். லட்சுமி வரவேற்று பேசினார். விழாவில் பல்வேறு போட்டிகள் இடம் பெற்றன. தொடர்ந்து குழந்தை களுக்கு தினமும் வீட்டில் பயிற்சி செய்வதற்கு சுவீஸ் பால் வழங்கப்பட்டது.